பிரிவின்படி, தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் குறித்து இவ்வரசு அளிக்கும் உயரளவு உத்திரவாதத் தொகையை அதன் மொத்த மதிப்பு ரூ. 175 கோடி (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) வரை உயர்த்தலாமென்று இப்பேரவை அரசிற்குப் பரிவுரை செய்கிறது கூட்டுறவு நிலவள வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பு மேற்சொன்ன உத்திர வாதத் தொகையில் அடங்காது. இத்தகைய பத்திரங்களின் செல்திறன் கால அளவு அவை வெளியிடப்படும் தேதியிலிருந்து எந்த ஒரு நேர்விலும் 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. இக் கடனீட்டுப் பத்திரத் தொடர் ஒவ்வொன்றுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி வீதத்திற்கு மேற்படாத வட்டி வீதம் கிடைக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதுபற்றிய விளக்கக் குறிப்பு ஒன்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அவை நிறைவேற்றித் தரும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

8 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை *(சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 39/72) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்ட மேலவை உறுப்பினர் களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையில்

* 22—8—72-ம தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்:—

1. திரு. கா. வேழவேந்தன்
2. திரு. என். கணபதி
3. திரு. எம். கந்தசாமி
4. திரு. எம். வி. கரிவேங்கடம்.
5. திரு. எம். தேவராஜன்
6. திரு. கே. திருப்பதி
7. திரு. கே. பி. கந்தசாமி
8. திரு. துரைமுருகன்
9. திரு. ஜி. இராஜாராம்
10. திரு. குழ. செல்லையா
11. திரு. கே. டி. கே. தங்கமணி
12. திருமதி த. ந. அனந்தநாயகி
13. திருமதி ஜோதி வெங்கடாசலம்
14. திரு. கே. ஏ. வகாப்
15. திரு. கே. கந்தசாமி
16. திரு. பி. வெங்கடசாமி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

MR. SPEAKER : Under Rule 139(1) of the Legislative Assembly Rules, I nominate the Hon. Minister for Backward Classes, to be a member of the Joint Select Committee.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஐந்தாவது திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/72)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) ஐந்தாவது திருத்த சட்ட முன்வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்ட எண் 58/1961) 73 (vii) பிரிவின்படி, பழத் தோட்டங்களாக அல்லது தோப்புகளாக அல்லது பாக்குத் தோட்டங்களாக 1959 சூலை 1 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பு மாற்றப்பட்ட நிலங்கள் தொடர்ந்து அவ்வாறு இருக்கும் வரையில், உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்படுகின்றன. வாழை மரம் மேற்சொன்ன சட்டத்தின் 3(47) பிரிவில் "தோப்பு" என்னும் சொற்றொடரின் பொருள் விளக்கத்தின் கீழ் வருகிற பழமரம் என்பதால், 1959 சூலை 1-ஆம் நாளன்று வாழை மரங்கள் வளரும் நிலங்கள் உச்ச வரம்புச் சட்டத்தினின்றும் விதிவிலக்கு பெறுதற்குரியவையாகலாம் என்று தமிழ்நாடு அரசுக்கும் தாடிக்கார வன்னியருக்கும் நடைபெற்ற (சிவில் மனுவிசாரணை மனு எண் 859/67) வழக்கில் உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. எனவே, வாழை மரங்கள் வளரும் நிலங்களை உச்ச வரம்புச் சட்டத்திற்குள் கொண்டு வரும் வகையில், "பழத் தோட்டங்களும் தோப்புகளும்" என்னும் சொற்றொடர்களின் பொருள் விளக்கத்திலிருந்து வாழையை நீக்கிவிடுவதென்று அரசு முடிவு செய்துள்ளது.

அரசால் ஏற்பளிக்கப்பட்ட (தமிழ்நாடு 1932 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது திருவாங்கூர்—கொச்சி 1951 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுகிற சங்கங்கள் நீங்கலாக ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமாகவுள்ள ஒரு நிலத்திற்கு மேற்சொன்ன சட்டத்தின் 73 (iii) பிரிவின்படி உச்ச வரம்புச் சட்டத்தின் விதித்துறைகளினின்றும் விலக்களிக்கப்படுகிறது. இவ் விலக்கு, ஒரு நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசால் ஒப்படை செய்யப்பட்டு, அந்த நிலக்குடியேற்ற கூட்டுறவுச் சங்கம் வைத்துள்ள ஒரு நிலத்திற்கு மட்டுமே பொருந்தும் வகையில், மேற்சொன்ன விதித்துறை திருத்தப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு 58 ஆம் சட்டத்தின் 73 (vi) பிரிவின்படி இச்சட்டத்தின் தொடக்க நாளன்று இருந்த எல்லா மலைத் தோட்டங்களும், உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்படுகின்றன. இதைப் போலவே, 73 (viii) பிரிவின்படி, இச்சட்டத்தின் தொடக்க நாளன்று

* 22-8-72-ம் தேதிய **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது.

விறகு மரங்கள் மட்டுமே வளர்க்கப்பட்டுள்ள நிலத்திற்கு உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்படுகிறது. மூலச் சட்டத்தையொட்டி, இச் சட்டத்தின் தொடக்க நாள் 1960 எப்ரல் 6 ஆக இருந்தது. அதன் விளைவாக, மலைப் பகுதி நீங்கலான ஒரு பகுதியில் 1960 எப்ரல் 6-ஆம் நாளில் இருந்த மலைத் தோட்டங்களும் விறகு மரங்களும் உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டவையாகும். மேலும், மேற்சொன்ன சட்டத்தின் 31-வது பிரிவின்படி, 1960 எப்ரல் 6-ஆம் நாளில் இருந்த மலைத் தோட்டப் பரப்பளவில் 20 சதவீதம் வரை அந்த மலைத் தோட்டத்தில் விரவியுள்ள அல்லது அதற்குப் பக்கத்தில் இருக்கும் எந்த ஒரு நிலத்தையும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப் படலாம். தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்தின் உச்சவரம்பைக் குறைத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1970) மூலம், மூலச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (11) பகுதியில் காணும் இச் சட்டத்தின் தொடக்க நாளுக்கான பொருள் விளக்கம், 1970 பிப்ரவரி 15-ஆம் நாள் என்று மாற்றியமைக்கப்பட்டது. இதன் விளைவாக 73 (ii) பிரிவில் குறிப்பிட்டுள்ள மலைத் தோட்டங்கள், 73 (viii) பிரிவில் குறிப் பிட்டுள்ள விறகு மரங்கள் குறித்த விதிவிலக்கு 1970 பிப்ரவரி 15-ஆம் நாளன்றிருந்த மலைத் தோட்டங்கள், விறகு மரங்களுக்கு மட்டுமே பொருந்துவதாகப் பொருள் கொள்ள வேண்டும். மலைப் பகுதிகளில் உள்ள நிலங்கள் பற்றிய விதிவிலக்கு 1-3-1972 லிருந்து நீக்கப்பட்டது. மலைப் பகுதிகளில் உள்ள நிலங்களுக்கான விதிவிலக்கு 1-3-1972-லிருந்து நீக்கப்பட்ட போதிலும், மலைப் பகுதிகளில் உள்ள மலைத் தோட்டங் களைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு, 73 (vi) பிரிவை யொட்டி, தொடர்ந்து இருக்கும். எல்லாப் பகுதிகளிலுமுள்ள மலைத் தோட்டங் கள், விறகு மரக் காடுகள் குறித்த விதிவிலக்கு, 1960 எப்ரல் 5-ஆம் நாளிலிருந்த மலைத் தோட்டங்களுக்கும் விறகு மரங்களுக்கும் மட்டுமே பொருந்த வேண்டும் என்றும், மலைத் தோட்டம் ஒன்று கூடுதலாக நிலம் வைத்துக் கொள்ள மேற்படிச் சட்டத்தின் 31- ஆவது பிரிவின்கீழ், வழங்கப் படுகிற அனுமதி 1960 எப்ரல் 6-ஆம் நாளிலிருந்த மலைத் தோட்டம் பரப்பளவில் 20 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட வேண்டும் என்றும் இவ்வரசு இப்போது முடிவு செய்துள்ளது.

மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்றுவதே இந்தச் சட்டவரைவின் நோக்கமாகும்.

இப்பேரவை இதை எற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU J. JAMES : Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee consisting of . . . . Members of both the Houses to consider the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fifth Amendment Bill, 1972 (L.A. Bill No. 40 of 1972) (Names of members to be furnished later on).

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fifth Amendment Bill 1972 (L.A. Bill, No. 40 of 1972) be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken clause by clause.

Clauses 2 to 4 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fifth Amendment Bill 1972 (L.A. Bill, No. 40 of 1972) be passed".

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே விதிவிலக்குகள் இன்னும் சில கொடுத்திருக்கிறோம் என்பதற்கு இன்றைக்கு இருக்கிற திருத்தம் எடுத்துக் காட்டாக இருக்கிறது. ஆர்ச்சார்ட்ஸ், தோப்புகள், நட் பேரிங் டிரீஸ், அத்தனையும் இதிலே வருமா என்று தெரியவில்லை. தேங்காய் இதிலே வருமா என்று தெரியவில்லை. அரிக்கா நட் மாதிரி கோக்கனெட். இந்த மாதிரி நட் பேரிங் டிரீஸ், பியூயல் டிரீஸ் இவைகளுக்கெல்லாம் எக்ஸம்ஷன் கொடுத்திருக்கிறார்கள். உடனே, நீங்கள் ஆட்சியிலே இருக்கும் பொழுது கொடுத்தது தானே என்று சொல்வீர்கள். அதற்குக்கூட உச்ச வரம்பு கொண்டு வருவது சரி என்று நினைக்கிறேன். சவுக்குத் தோப்பு பல ஏக்கர்களில் போடுகிறார்கள். ஏதோ சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். மன்றாடியார் லைவ் ஸ்டாக்குக்கு நிலம் வைத்திருக்கிறாரே என்று சொன்னார்கள். அதுமாதிரி செங்கப்பட்டிலே பல பேர் சவுக்குப் போட்டு தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பக்த வத்சலம் செய்திருந்தால் நீங்கள் அதைத் திருத்த வேண்டியதுதானே. ஆகவே, எவ்வளவு தூரம் விதிவிலக்குகளைக் குறைத்துக் கொண்டு வருகிறோமோ அதுதான் நல்லது.

அடுத்து மாந்தோப்புகள். நார்த் ஆர்க்காட்டிலே வேலூர் மாம்பழமெல்லாம் பேமஸ். வேலூர் அமைச்சர், ஆகவே, அதைக் கடுமையாகச் சொல்கிறேன். ஆகையினாலே, தோப்புகள், நெட் பேரிங் டிரீஸுக்கு இருக்க கூடிய இடங்கள், புயூயல் டிரீஸ், இதையெல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து, அவைகளுக்கும் உச்ச வரம்பு வைத்து, விதிவிலக்கு கொடுக்காமல் சீர்திருத்தத்தின் அடிப்படையிலே கொண்டு வருவது அவசியம் நல்லது.

திரு. நா. வீராசாமி : ஒரு கிளாரிபிகேஷன், சார். வேலூரிலே மாம்பழம் இருப்பதாகச் சொன்னார்கள். சேலத்திலேதான் மாம்பழம் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சாப்பாட்டு வேளை, அதனாலே மாங்காய், தேங்காய் என்று சொல்கிறார்கள்.

திரு. மணலி சி. கந்தசாமி: விதிவிலக்கு அளித்திருக்கக்கூடிய இந்த மசோதாவைக் கொள்கை அடிப்படையில் நான் எதிர்க்கிறேன். அரசு, நிலச்சீர்திருத்தம் என்று சொல்லும்பொழுது, சோசலிசம் என்று சொல்லும்பொழுது இரண்டு விதமான குறிக்கோள் உண்டு. ஒன்று, ஏழைகளுக்கு நிலம் விநியோகம் செய்வது. இன்னொன்று, ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது—அந்தத் தத்துவத்தை கொள்கையளவிலே ஏற்றுக் கொள்ளுதல்.

ஆயிரம் ஏக்கர் நிலத்திலே தென்னந்தோப்பு வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். சவுக்குத்தோப்பு வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 4 வருஷம், 5 வருஷம் பொறுத்து என்ன செய்வார்கள். மறுபடியும், சமன்படுத்தி, அதில் ஏதாவது பயிர் செய்வார்கள்.

அடுத்தபடி, வாழைப் பண்ணை. இப்பொழுது வாழையைப் பழம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள், ஹைகோர்ட்டில். ஆகையினாலே விதிவிலக்கு என்று சொல்கிறார்கள். நெல் பழம் இருக்கிறது, தெரியுமா? கருப்பாக இருக்கும். அதற்கும் விதிவிலக்கு கொடுக்கலாமே. நிலத்தை எந்த அளவுக்குக் குறைக்கிறோமோ, அந்த அளவுக்கு நல்லது. நெல் போடுகிறவர்களுக்கு ரூ. 5,000 வருமானம் வந்தால் வரி கிடையாது, பாக்கு போடுகிறவர்களுக்கு ரூ. 10 லட்சம் வந்தாலும் வரி கிடையாது என்று இம்மாதிரி தாரதம்மியம் காட்டக் கூடாது. 20 பாக்கு மரத்தை ஒரு விவசாயி வைத்துக் கொள்ளக் கூடாதா? 20 தென்னை மரங்களை ஒரு விவசாயி வைத்துக்கொள்ளக் கூடாதா? 20 வாழை மரம் வைத்து வருமானம் பெறக் கூடாதா? உள்ளபடியே, நிலம் கொடுக்க விரும்பினால், ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க விரும்பினால், உண்மையான சம தர்ம சமுதாயப் பாதையில் போக வேண்டுமென்று சொன்னால், இத்தகைய விதிவிலக்குத் தேவையில்லையென்று தான் சொல்ல விரும்பு கிறேன். ஓடுகிற ஓட்டத்திலே இந்த பில்லை பாஸ் பண்ணுகிறோம் என்று சொன்னால், அப்புறம் டிஸ்கிரஷன், நெல் வைத்திருப்பவர்களுக்கு ஒரு பாகுபாடு, மற்றவர்களுக்கு ஒரு பாகுபாடு என்று சொன்னால், அது நல்லதல்ல.

தஞ்சாவூரில் தென்னை மரம் என்று சொன்னால் ஆயிரம் ஏக்கர் தென்னை மரம் வைத்திருக்கிறார்கள். ஒரு வேலையும் கிடையாது, தண்ணீர் பாய்ச்சுவது கிடையாது. கால் ஆட்டிக்கொண்டு உட்கார்ந்து வருவாய் பெறுகிறார்கள். 6 மாதத்திற்கு ஒரு வெட்டு. அவர்களிடத்திலே ஏன் அவ்வளவு பணம்? அந்த ஊரிலே அதிகம் செல்வாக்குப் பெறுகிற அளவுக்கு அவர்களிடம் பணம் இருக்கிறது. உடனே, 10 ஏக்கர், 15 ஏக்கர் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. உயர்ந்த பட்சம் எத்தனை ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று சர்க்கார் ஆர அமர முடிவு செய்ய வேண்டுமே தவிர, அவசரக் கோலம் அள்ளித் தெளித்த மாதிரி செய்தால், மறுபடியும் ஏழை பணக்காரன் பிரச்னை வரத்தான் செய்யும்.

10, 15 தென்னை மரம் வைத்துக் கொண்டிருப்பதை மறுக்கிறோம். இதைப்பற்றிச் சர்க்கார் யோசித்து, ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன், இப்போதைக்கு. ஆனால், தோப்புகளுக் கெல்லாம் எக்சம்ஷன் கொடுப்பது மீண்டும் அமைச்சர் அவர்களால் பின்னர் பரிசீலனை செய்யப்பட வேண்டும். நாட்டுக்குத் தேவையான உணவை கொடுக்க வேண்டும். அரிசி போடலாமா, கம்பு போடலாமா? பக்தவத்சலம் பற்றி நம்முடைய அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எல்லோரும் சவுக்குப் போடுங்கள் என்று சொல்கிற மாதிரி சவுக்கு மூவ்மெண்ட் நடந்தது. நெல் வரக் கூடாது. ஆகையினாலே பஞ்சம் வரக்கூடும்; விலைவாசி ஏறவேண்டு மென்ற நோக்கத்தோடு சொன்னார்களோ என்னவோ தெரியாது. நமக்குவேண்டியது உணவுப் பண்டம். அந்த உணவுப் பண்டத்திற்குப் பதிலாக சவுக்குத் தோப்பு வைக்கிறார்கள். உதாரணத்திற்காக, என்னுடைய கடலூர் பகுதியிலே, 4,000, 5,000 ஏக்கர் முந்திரி தோப்பு வைத்திருக்கிறார்கள். அவர்கள் தனியாக, 50 ஏக்கர், 100 ஏக்கரை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் நாம் இதை அலவ் செய்ய வேண்டும். ஆகவே, தோப்புகளுக்கு எக்சம்ஷன் கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

இந்தச் சட்டத்தை பாஸ் செய்துவிட்டு, மீண்டும் 2 மாதம், 3 மாதம் கழித்து சட்டசபை கூடுகிற நேரத்திலே, இதற்கு அமெண்ட்மெண்ட் கொண்டு வந்து, எதெதெற்கு தேவையோ அவற்றிற்கு மட்டும் எக்சம்ஷன் கொடுக்க வேண்டும். பல பேர், இந்த சீலிங் ஆக்டிலிருந்து, எஸ்கேப் பெறுவதற்காகத் தோப்புகளை வைத்திருக்கிறார்கள்.

1960-ம் ஆண்டு ஏப்ரல் 6-ம் தேதி நோட்டிபைட் செய்யப்பட்டது. ஆனால், 1957-58-லிருந்து தோப்புகளாக இருந்ததாக கன்வர்ட் பண்ணிக் கொண்டு பல பெரிய பெருச்சாளிக ளெல்லாம் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இதை என்கரேஜ் செய்வதோ, அவற்றிற்கு உதவி செய்வதோ கூடாது. ஆகையால், மீண்டும் நம்முடைய அமைச்சரவை புனர் பரிசீலனை செய்ய வேண்டும். இப்பொழுது இந்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டு, ஒரு மாதம், 2 மாதம் கழித்து, இவற்றிற்கான் எக்சம்ஷனை யெல்லாம் எடுத்து விடுவதற்கு ஒரு ஆர்டினன்ஸ் கொண்டு வரலாம், அல்லது சட்டமன்றத்திலே இந்த சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வாவேண்டுமென்று பணிவன்போடு கேட்டு, இன்றையதினம் இந்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது வந்திருக்கின்ற இந்தத் திருத்தம் விதிவிலக்குகள் கொடுப்பதற்காக அல்ல. வாழைக்குப் போடப்பட்ட சட்டத்திலே சில சட்ட சிக்கல்கள் ஏற்பட்டதினாலே இந்தக் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். 1959-ஆம் ஆண்டு அல்லது 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு அல்லது அன்றைய தேதியில் இருந்து வாழைத் தோப்புகள் போன்ற பழ மரங்களுக்கு நாம் விதிவிலக்குக் கொடுப்பதைப் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்

கிறேம். மேற்கொண்டு விதிவிலக்குகள் பற்றிப் பொதுவாக முடிவு செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு ஹைபவர் கமிட்டி இருக்கிறது, விதிவிலக்குகளை ரத்து செய்வதுபற்றி அந்தக் கமிட்டி முடிவுசெய்ய வெண்டும், அந்த வகையில் அந்தக் கமிட்டி அடிக்கடி கூடி அவற்றைப் பற்றி யெல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது வந்திருக்கின்ற சட்டம் சட்டசிக்கல்களைப் பற்றியதாகும். ஆகவே இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) ஐந்தாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/72) நிறைவேற்றப் படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இந்தச் கூட்டத் தொடர் இன்றுடன் முடிவடைந்தது. பேரவையின் கூட்டம் காலவரையறையின்றி, மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்படாமல் ஒற்றிவைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடாமல் ஒற்றிவைக்கப் பட்டது.

10. பேரவையின் முன் வைக்கப்பட்ட எடுகள்.

A. Statutory Rules and Orders.

271. Annual Financial Statement for 1972–73 and Supplementary Financial Statement for 1971–72 of the Tamil Nadu Electricity Board. [*Laid on the Table of the House under sub-section* (3) *of section* 61 *of the Electricity* (*Supply*) *Act*, 1948 (*Central Act* 54 *of* 1948).]

272. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1970–71. [*Laid on the Table of the House under section* 69 (5) *of the Electricity Supply Act*, 1948 (*Central Act* 54 *of* 1948).]

273. Fourteenth Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1970–71 (Tamil). [*Laid on the Table of the House under section* 75 (1-A) *of the Electricity Supply Act*, 1948 (*Central Act* 54 *of* 1948).]

274. Notification issued with G.O. Ms. No. 1782, Agriculture, dated the 26th June 1972 in regard to establishment of regulated market at Manachanallur in Tiruchirappalli district to provide facilities for the